# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 20.11.2025**

**OS No. : 16/2022**

**Pw : 1**

**Name : திரு. சுப்பிரமணியன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் பி.காம் படித்துள்ளேன். விவசாயம் செய்கிறேன், இடம் வாங்கி விற்கும் தொழில் செய்கிறேன். எனக்கு பிரதிவாதி ஹரிஹரனை பக்கத்து ஊர்க்காரர் என்பதால் தெரியும். கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 26.04.2014 ம் தேதி மேற்படி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நான் பிராதிலும், உறுதி கூற்றிலும் எதன் அடிப்படையில், என்ன தேவைக்காக பிரதிவாதி என்னிடம் பணம் வாங்கினார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஒப்பந்தத்தில் 1 வருட காலத்திற்குள் கிரையம் முடிக்கவேண்டும் என்றால் சரிதான். அந்த ஒரு வருட காலத்திற்குள் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற நான் முயற்சி எடுக்கவில்லை என்றால் நான் பலமுறை பிரதிவாதியை ஒப்பந்தத்தை நிறைவேற்றி தர அழைத்தேன். சட்டப்படி அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான், வாய்மொழியாகத்தான் கேட்டேன். 2014 ம் வருடம் போடப்பட்ட ஒப்பந்தம் குறித்து 2017 ம் ஆண்டிற்குள் நான் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. அவ்வாறு தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் பிராதில் கோரியுள்ள முதல் பரிகாரம் மேற்படி கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றி தரவேண்டும் என்பதுதான் என்றால் சரிதான். நான் கொடுத்த 10 லட்ச ரூபாய் பணத்தை பிரதிவாதி திரும்ப செலுத்த வேண்டும் என மாற்றுப்பரிகாரம் கோரியுள்ளேன் என்றால்

சரிதான். அந்த 10 லட்ச ரூபாய் பணத்தை திரும்ப செலுத்த கோரி பரிகாரம் கேட்டுள்ள நிலையில் அதற்குரிய நீதிமன்ற கட்டணத்தை நான் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. எனவே உரிய முத்திரைக்கட்டணம் செலுத்தாத தோஷத்தால் மேற்படி பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர், பிரதிவாதிக்கு நான் சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் ஒரு லட்ச ரூபாய் பணம் மட்டுமே கடனாக பெற்றிருந்தார் என்றும், அதற்கு பல்வேறு தவணைகளில் வட்டியுடன் அசல் பணத்தையும் முழுமையாக செலுத்திவிட்டார் என்றும், அந்த ஒரு லட்ச ரூபாய் பணத்திற்கு செக்யூரிட்டி வகைக்காக மட்டும் வா.சாஆ-1 ஆவணம் எழுதப்பட்டது என்றும், அதை நான் மோசடியாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1 லட்ச ரூபாய் பணத்தை வட்டியுடன் நான் பெற்றுக்கொண்ட காரணத்தினால்தான் காலதாமதமாக பிரதிவாதியை சிரமப்படுத்த வேண்டும் என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே பிரதிவாதி 10 லட்ச ரூபாய் பணம் வாங்கியிருந்தால் அதை வசூலிக்க நான் முன்னரே உரிய நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கடன் தொகையை திரும்ப செலுத்திவிட்டு, பத்திரத்தை செல்லடிக்க திரும்ப கேட்டதால்தான் மன வருத்தம் ஏற்பட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் பிரதிவாதியிடம் 10 லட்ச ரூபாய் கொடுத்ததற்கு எந்தவொரு ஆதரவையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ரொக்கமாக கொடுத்தேன், அதனால் தாக்கல் செய்யவில்லை. எனவே இவ்வழக்கு காலாவதி தோஷத்தாலும்,உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தாத தோஷத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், நான் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi